# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No.56/2020 connected with O.S.No.133/2020 தேதி- 21.07.2026
(PW.1) – மணிகண்டன்

**அசல் வழக்கு எண். 56/2020 வழக்கின் 2 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1.சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை யார் தயார் செய்தார் என்றால் வழக்கறிஞர் தயார் செய்தார். அசல் வழக்கு எண்.56/2020 மற்றும் அசல் வழக்கு எண்.133/2020 என்ற இரு வழக்குகளில் ஜோனி ஜோசப் எந்த வழக்கில் எத்தனையாவது பிரதிவாதி என்று தெரியுமா என்றால் சரியாக சொல்ல இயலவில்லை. அசல் வழக்கு எண்.56/2020 ல் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் அதில் கோரியுள்ள பரிகாரங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும்.

2. இந்த வழக்கில் என்ன பரிகாரங்கள் கேட்டுள்ளேன் என்றால் சர்வே எண்.154/13A2. விஸ்தீரணம் 6.250 சென்ட் ஆகும், தனிப்பட்டா பெற்று அனுபவித்து வருகிறேன், அதில் சில பகுதி 1 வது பிரதிவாதியான ஆன்டனி கைவசத்தில் உள்ளது. அதை மீட்டு தரக்கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்கு எண்.56/2020 என்ற வழக்கில் 2 வது பிரதிவாதிக்கு எதிராக ஜோனி ஜோசப்பிற்கு எதிராக எந்த நிவாரணம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

3. 21.05.2018 ஆம் தேதியில் ஜோனி ஜோசப்பிடம் இருந்து சொத்தை விலைக்கு வாங்கும் போது அது மனையாக இருந்தது என்றால் இல்லை, சர்வே எண்.154/13A2 மற்றும் 154/13A3 சேர்த்து ஒரு ஷீட் போடப்பட்டு இருந்தது. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணம் என்னுடைய பெயர் உள்ள கிரயம் ஆவணம் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கட்டிடம் ஏதும் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, கிரயம் முடிந்த பிறகு மாற்றி தருவதாக சொன்னார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கட்டிடம் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றாலும், காலி மனை என்று தான் குறிப்பிடப்பட்டு இருந்தது என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதி கிரயம் முடிந்த பிறகு மாற்றி தருவதாக சொல்லியுள்ள

நிலையில் அதற்கான ஆவணம் ஏதும் ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை, வாக்கால் ஏற்படுத்தப்பட்டதாகும்.

5. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கை சொத்தை பார்வையிட்டு அவருடைய அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்ட போது நான் உடனிருந்தேனா என்றால் உடனிருந்தேன். நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் சரியாக தான் இருந்தது என்றால் சரிதான். நான் சொத்தை விலைக்கு வாங்கும் போது சொத்து தனிப்பட்டாவாக இருந்தது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் ரீ சர்வே பிளான் அடிப்படையில் சொத்தை அளக்க வேண்டும் என்று கேட்டு கொண்டேனா என்றால் கேட்டு கொண்டேன்.

6. நான் ரீ சர்வே பிளானின் படி அளக்க வேண்டும் என்று நீதிமன்ற ஆணையரிடம் கோரிக்கை எதுவும் வைக்கவில்லை என்றாலும், அவ்வாறு எந்த குறிப்பும் ஏற்படுத்தப்படவில்லை என்றாலும், தற்போது நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல, அதை பற்றி எனக்கு தெரியாது, வழக்கறிஞருக்கு தான் தெரியும். வழக்கில் ஒரு மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நினைவில் இல்லை.

7.நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் மாதிரி வரைபடத்தில் அளவுகள் எதுவும் குறிப்பிடப்படாததுடன் ஆணையரின் வரைபடத்துடன் ஒத்து போகவில்லை என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றாலும், போலியாக ஒரு வரைபடத்தை தயார் செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொத்தை விலைக்கு வாங்கிய பிறகு தான் சொத்தின் மேற்கு பக்கம் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டது என்றால் கட்டிடம் தான் இருந்தது.

8. என் சொத்தின் மேற்கு பக்கம் உள்ள சொத்து 2 வது பிரதிவாதியான ஜோனி ஜோசப் விலைக்கு கொடுத்த சொத்து என்றால் சரிதான். என்னுடைய சொத்து தனிப்பட்டாவாக இருந்த நிலையில் தாசில்தார் அலுவலகத்தில் F line படி அளக்க கேட்டு மனு அளிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தாலுக்கா சர்வேயர் சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்வார் என்றாலும், அவ்வாறு அறிக்கை எதுவும்

தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் மனு அளித்தேன், தாலுக்கா சர்வேயர் சொத்தை பார்வையிட்டு அளத்தார்கள், அறிக்கை தாக்கல் செய்தார்களா என்ற விவரம் தெரியாது.

9. மேற்சொன்னவாறு எந்த மனு அளிக்கவில்லை என்றாலும், அவ்வாறு தாலுக்கா சர்வேயர் வந்து அளக்கவுமில்லை என்றாலும், அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்தால் மனு மற்றும் அதற்குரிய ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்ததிருப்பேன் என்றால் சரியல்ல. சொத்தை விலைக்கு வாங்கும் போது எல்லா ஆவணங்களையும் சரிபார்த்து எனக்கு தெரிந்த பத்திர எழுத்தாளர் மூலம் ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கும் என்றால் சரிதான்.

10. 2018 ஆம் ஆண்டில் சொத்தை விலைக்கு வாங்கும் போது இருந்த விலையை விட தற்போது விலை அதிகமாக இருக்கும் என்பதால் 2 வது பிரதிவாதியை கஷ்ட, நஷ்டப்படுத்த வேண்டும் என்று தேவையில்லாமல் இந்த வழக்கில் 2 வது பிரதிவாதியை கட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 வது பிரதிவாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் கோராமல் அவரை துன்புறுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அவரை கட்சியாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. 2 வது பிரதிவாதிக்கு செலவுத்தொகையுடன், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், 2 வது பிரதிவாதிக்கு நஷ்டயீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்திலும், வழக்குரையிலும் 2 வது பிரதிவாதிக்கு எதிராக உள்ள சங்கதிகள் பொய்யானது என்பதால் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.